எழுப்புகிறார்கள். இது நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரும். எதிர்காலத்தில் இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அவர் கருணை காட்டுவார் என்று நம்பலாம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சபையில் நான்கு ஐந்து மெம்பர்கள் ஜீப் கொடுக்கப்படுமா என்று கேட்டு விட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயில் இருந்து எந்தத் தகவலும் இதுபற்றி வரவில்லை. ஜீப் கொடுத்தால் வேக மாகவும், திறமையாகவும் நடப்பதற்கு சூழ்நிலை ஏற்படும். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நாம் கடந்த 2½ மாத காலமாக விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சட்ட மன்றக் கூட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, என்னென்ன பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது பற்றி உறுப்பினர் களுக்குத் தெரியும். ஜீப்பிற்கு என்று நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே தான் மௌனம் சாதிக்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை அதிகாரி ஸ்தல விசாரணை செய்ய செல்லும்போது, ரெவின்யு அதிகாரிகள், முன்சீப், கர்ணம் போன்ற அதிகாரிகள் ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை என்றும், மதிப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. பணிகள் இதனால் காலதாமதம் ஏற்படு கின்றன. இதைப் போக்க என்ன ஆலோசனை செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு என்று நிரந்தரமான பணியாளர் களை நியமிக்கிற நேரத்தில் அவர்களுக்கு என்று தனித் தன்மை யும், தனி அதிகாரமும் வழங்கப்படும். அந்த நேரத்தில் எல்லா அதிகாரிகளும் தங்கள் கடமையைச் செய்வார்கள். அப்படியும் ஒத்துழைப்புத் தராத நிலைமை வருமானால், எதிர்காலத்தில் என்ன செய்யலாம் என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

ஊட்டியில் கலைக்கூடம்.

*வினா எண் 856—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கலை, பண்பாடுகளை விளக்கும் வகையில் ஊட்டியில் ஒரு கலைக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களின் கலை, பண்பாடு களை விளக்கும் வகையில் ஊட்டியில் ஒரு கலைக்கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஊட்டி சம்பந்தப் பட்ட பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் ஊட்டி மாவட் டத்தைச் சேர்ந்தவரா?

ஒட்டர் சமூகத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

* வினா எண். 857 —

திரு. இரா. தாமரைக்கனி :
திரு. து. புருஷோத்தமன் :
திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டர் சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டி யலில் சேர்க்கும்படி அரசுக்கு கோரிக்கை ஏதும் அண்மையில் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(ஆ) அது மத்திய அரசிற்கு, தகுந்த நடவடிக்கைக்கு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று 'ரெகமண்டு' பண்ணி மத்திய சர்க்காருக்கு அமைச்சர் அவர்கள் அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் துரிதமாக மத்தியச் சர்க்காருடைய முடிவைப் பெற்றால், அவர்கள் இதுபற்றி பதில் சொல்வதற்கு ஏதுவாக